CC. No. : 80/2013

தேதி : 07.03.2025

பெயர் : சத்தியமூர்த்தி

த.பெ. : கணேசன்

அ.சா : 1

**அ.சா.1 முதல் விசாரணை தொடர்ச்சி :**

1. KA 03 MH 4050 என்ற ஸ்கார்பியோ வாகனத்திற்கு அட்சயராமானுஜம் கொடுத்த படிவம் 29, படிவம் 30, படிவம் 28, படிவம் 27, படிவம் 20 மற்றும் காவல்துறையினரால் வழங்கப்பட்ட NOC படிவம், அட்சயராமானுஜம் வழங்கிய உறுதி மொழி பத்திரம் மற்றும் அவர் வாகனத்தின் முன்பாக எடுத்துக் கொண்ட புகைப்படத்தின் சான்றிட்ட நபர், அட்சயராமானுஜம் குடும்ப அட்டையின் நகல், புகை சான்று நகல், பவன் எண்டர்பிரைசஸ், ராஜா எண்டர்பிரைசஸ் கிருஷ்ணகிரி, மேற்படி வாகனத்திற்கு போடப்பட்ட டீசல் பில், சாய்ராம் மோட்டார்சில் இருந்து பெறப்பட்ட ஸ்கார்பியோ வாகனத்திற்கான இன்வாய்ஸ் நகல், அட்சயராமானுஜம் கொடுத்த அதிகாரக்கடிதம், மேற்படி வாகனத்தின் Chasis பென்சில் பிரிண்ட் சான்றிட்ட நபர், படிவம் 60, மேற்படி வாகனத்தின் பதிவு சான்று நகல், ஓரியன்டல் இன்சூரன்ஸ் கம்பெனியின் இன்சூரன்ஸ் நகல், மேற்படி வாகனம் 20.08.2004 ல் சிறைப்பிடிக்கப்பட்டதற்கான சோதனை அறிக்கை இரண்டாம் நகல், ஆர்.டி.ஓ பெங்களுர் கிழக்கு, இந்திரா நகர், அவர்களுக்கு அனுப்பட்ட வாகனத்தின் பி பதிவேடு கேட்டு அனுப்பட்ட கடிதத்தின் நகல், மேற்படி வாகனத்திற்கு பெங்களுர் கிழக்கு ஆர்.டி.ஓ அலுவலகத்தில் இருந்து மாருதி 800 என்று பெறப்பட்ட பி பதிவேடு சான்று, KA 03 ME 7948 என்று பெங்களுர் கிழக்கில் பதிவு செய்யப்பட்டு அதனுடைய அடிச்சட்டை எண்ணின் கடைசி நான்கு எண்கள் 88490 பொறி எண் 70815 என்ற வாகனம் திருட்டு வழக்கில் சம்பந்தப்பட்டுள்ளதாக வழக்கு எண்.370/2009 ஆர். எம் நகர் காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார் மேற்படி பி பதிவேடு சான்றில் பதிவுகள் செய்யப்பட்டுள்ளது. அதனை வைத்து தான் மேற்படி சமர்பிக்கப்பட்ட KA 03 MH 4050 என்று பகுதி அலுவலகம் கோவில்பட்டியில் சமர்பிக்கப்பட்ட வாகனம் திருட்டு போன வாகனம் என்று உறுதி செய்யப்பட்டது. அந்த பி பதிவேடு KA 03 ME 7948 என்ற வாகனத்தின் சான்றிட்ட நகல், மேற்படி வாகனத்தின் உண்மை தன்மை குறித்து கொடுக்கப்பட்ட சான்று வட்டார போக்குவரத்து அலுகலர் தூத்துக்குடி அவர்களுக்கு சமர்பிக்கப்பட்டதன் நகல். **மேற்படி ஆவணங்கள் அ.சா.ஆ.22 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.**
2. TN 69 R 8687 என்ற ஸ்கார்பியோ வாகனம் சிறைபிடிக்கப்பட்ட மோட்டார் வாகன ஆய்வாளரால் கோவில்பட்டி காவல்நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட சோதனை அறிக்கை இரண்டாம் நகல், வட்டார போக்குவரத்து அலுவலர் பெங்களுர் மேற்கு பகுதி, ராஜாஜி நகர்,

பெங்களூர் 10, அவர்களுக்கு அனுப்பட்ட KA 02 MC 7309 என்ற வாகனத்தின் உண்மை தன்மை கேட்டு அனுப்பட்ட கடித நகல், KA 02 MC 7309 என்ற வாகனம் மாருதி 800 ஸ்டேன்டர் வாகனமாக உள்ளது என்று பெறப்பட்ட பெங்களூர் வெஸ்டில் இருந்து பி பதிவேடு நகல், அட்சயராமானுஜம் அவர்களால் வழங்கப்பட்ட கடிதம் (கட்டணம் செலுத்தப்பட்டது) முன்பதிவு எண் பெறுவதற்காக, வட்டார போக்குவரத்து தூத்துக்குடி அவர்களுக்கு சமர்பிக்கப்பட்ட KA 02 MC 7309 பற்றிய கடிதம், படிவம் 29, படிவம் 30, படிவம் 27, சாய்ராம் மோட்டார்சில் இருந்து பெறப்பட்ட ஸ்கார்பியோ வாகனம் விலைப்பட்டியல் நகல், படிவம் 28 இரண்டு நகல்கள், படிவம் 20, கட்டணம் செலுத்திய விவரங்கள், அட்சயராமானுஜத்தினால் அளிக்கப்பட்ட உறுதி மொழிப்பத்திரம், அட்சயராமானுஜத்தினால் வழங்கப்பட்ட அதிகாரக்கடிதம், மேற்படி வாகனத்தின் புகைச்சான்று, தூத்துக்குடி எஸ்.பி அவர்களால் வழங்கப்பட்ட குற்றவழக்குகள் இல்லை என்ற கடிதம் மற்றும் வாகனத்தின் புகைப்படத்துடன் அவர் நிற்பது போன்று எடுக்கப்பட்ட புகைப்படம், அவருடைய குடும்ப அட்டை நகல், படிவம் 60, ஒப்புகை பதிவு அஞ்சலில் மோட்டார் வாகன ஆய்வாளர் கோவில்பட்டியில் இருந்து வட்டார போக்குவரத்து அலுவலர் பெங்களூர் கிழக்கு அவர்களுக்கு உண்மை தன்மை கோரி அனுப்பட்ட கடிதம், கடிதத்துடன் இணைப்பட்ட ஒப்புகை கடிதம், எஸ்.ரங்காராவ், ஆர்.டி.ஓ பெங்களூர் கிழக்கு அவர்களிடம் இருந்து மோட்டார் வாகன ஆய்வாளர் கோவில்பட்டிக்கு பெறப்பட்ட Noc குறித்த உண்மை தன்மை பற்றிய கடிதத்தின் நகல், KA 02 MC 7309 வாகனத்தின் கர்நாடக மாநில பதிவு சான்று நகல்கள் 7 பக்கம், மோட்டார் வாகன ஆய்வாளர் கோவில்பட்டி அவர்களால் முகவரி மாற்றம் மற்றும் உரிமை மாற்றம் செய்ய வட்டார போக்குவரத்து அலுவலருக்கு வைக்கப்பட்ட **நோட் சீட் 4 பக்கம் ஆகியவை முறையே அ.சா.ஆ.23 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.**

3. TN 69 AZ 0299 என்ற வாகனம் மோட்டார் வாகன ஆய்வாளர் கோவில்பட்டி, அவர்களால் சிறைப்பிடிக்கப்பட்டு காவல்நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட சோதனை அறிக்கை இரண்டாம் படி வரிசை எண்.A1784847, KA 03 MC 9403 என்ற வாகனம் போர்டு ஐக்கான் உள்ளது என்று பெறப்பட்ட பி பதிவேடு நகல், KA 09 MD 321 என்ற வாகனம் பி பதிவேடு நகல், வட்டார போக்குவரத்து அலுவலர் தூத்துக்குடிக்கு சமர்பிக்கப்பட்ட KA 03 MC 9403 என்ற வாகனத்தின் நகல், படிவம் 20, படிவம் 29, படிவம் 30, கட்டணம் செலுத்திய விவரங்களுடன், கிருஷ்ணமூர்த்தி அவர்களின் குடும்ப அட்டை நகல் இரண்டு எண்ணம், கிருஷ்ணமூர்த்தி வழங்கிய அதிகாரக்கடிதம், Chasis Pencil Print 1, வாகனம் கொண்டு வரும் போது பெங்களூரில் டீசல் பில் செய்ததற்கான பவன் எண்டர்பிரைசஸ் கேஷ் பில் மற்றும் இன்வாய்ஸ் நகல், சாய்ராம் மோட்டார்ஸ், சேலத்தில் மேற்படி வாகனத்திற்கு டீசல் போட்டதற்கான பில் 1, சாய்ராம் மோட்டார்ஸ் இன்வாய்ஸ் நகல்கள், புகைச்சான்று, எடை ரசீது, ஸ்கார்பியோ வாகனத்தின் நிழற்படம் அவர் நிற்பது போன்று உள்ளது. எஸ்.பி, தூத்துக்குடி அவர்களிடம் இருந்து வட்டார போக்குவரத்து அலுவலர் தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பட்ட

கடிதம், எந்த வழக்கும் நிலுவையில் இல்லை என்று பெறப்பட்ட கடிதம், படிவம் 28 இரண்டு நகல்கள், படிவம் 27, கிருஷ்ணமூர்த்தியால் மேற்படி வாகனம் உண்மையானது மற்றும் பெங்களூரில் இருந்து எடுத்து வரப்பட்டது என்று அளிக்கப்பட்ட ரூ.20/− க்கான உறுதி மொழிப்பத்திரம், படிவம் 60, மோட்டார் வாகன ஆய்வாளர் கோவில்பட்டியில் இருந்து பெங்களூர் கிழக்கு ஆர்.டி.ஓ அவர்களுக்கு NOC அனுப்பட்டதன் உண்மை தன்மை கேட்டு அனுப்பட்ட ஒப்புகை பதிவஞ்சலுடன் அனுப்பட்ட கடிதம், கடிதம் அனுப்பியதற்கான சான்று, ரசீது, பெங்களூர் கிழக்கில் இருந்து பெறப்பட்ட ஒப்புகை அட்டை, ரங்காராவ், பெங்களூர் கிழக்கு, ஆர்.டி.ஓ அலுவலரிடம் இருந்து மோட்டார் வாகன ஆய்வாளர் கோவில்பட்டிக்கு மேற்படி வாகனத்தின் உண்மை தன்மை குறித்து அனுப்பட்ட போலியான கடித நகல், மேற்படி கடிதம் ஒசூரில் இருந்து அனுப்பட்டுள்ளது என்பதற்கான ரசீது மோட்டார் வாகன ஆய்வாளர் கோவில்பட்டியில் இருந்து பெங்களூர் கிழக்கு ஆர்.டி.ஓ அவர்களுக்கு KA 03 MC 9403 மறுபதிவு செய்யப்பட்டு TN 69 AZ 0299 என்று பதிவெண் வழங்கப்பட்டுள்ளது என்று அனுப்பட்ட தகவல் கடிதம் மேற்படி வாகனத்தின் பதிவு சான்று நகல் 3 பக்கம், வட்டார போக்குவரத்து அலுவலர் தூத்துக்குடிக்கு மேற்படி வாகனத்தை மறுபதிவு செய்வதற்காக அனுப்பட்ட அலுவலக குறிப்பு **நோட் சீட் 4 பக்கம் ஆகியவை அ.சா.ஆ.24 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.**

4. படிவம் 20, TN 69 T 3715 கட்டணம் செலுத்திய விவரம் 2 பக்கம், தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலருக்கு சமர்பிக்கப்பட்ட KA 03 MD 2255 என்ற வாகனத்தின் நிலை பற்றிய கடிதம், படிவம் 29 2 எண்ணம், படிவம் 30, படிவம் 27, படிவம் 28 இரண்டு நகல், சாய்ராம் மோட்டார்சின் இன்வாய்ஸ் நகல், KA 03 MD 2255 ஸ்கார்பியோ வாகனம் எந்த குற்றவழக்கிலும் இல்லை என்று எஸ்.பி ஆப் போலிஸ் தூத்துக்குடியில் இருந்து வட்டார போக்குவரத்து தூத்துக்குடி அனுப்பட்ட கடித நகல், மேற்படி வாகனத்தின் நிழற்படம் உரிமையாளர் முனுசாமி நிற்பது போல் உள்ள நகல் ஒன்று, முனுசாமியின் குடும்ப அட்டை நகல், புகைச்சான்று ஒன்று, ரூ.10/− உறுதி மொழிப்பத்திரத்தில் முனுசாமி அவர்கள் மேற்படி வாகனத்தில் எந்த வில்லங்கம் இருந்தாலும் அதனை நானே முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொள்கிறேன் என்று கொடுக்கப்பட்ட உறுதி மொழிப்பத்திரம், படிவம் 60 இரண்டு, மோட்டார் வாகன ஆய்வாளர் கோவில்பட்டியில் இருந்து வட்டார போக்குவரத்து அலுவலர் பெங்களூர் மேற்கு, அவர்களுக்கு அனுப்பட்ட NOC ன் உண்மை தன்மை குறித்த கடிதம் நகல் ஒன்று, ரங்காராவ் ஆர்.டி.ஓ பெங்களூர் மேற்கில் இருந்து மோட்டார் வாகன ஆய்வாளர் கோவில்பட்டிக்கு மேற்படி வாகனத்திற்கு NOC வழங்கப்பட்டது உண்மை என்று போலியாக வழங்கப்பட்ட கடிதம், ஆன் ஐ.ஜி.எஸ் ஒன்லி என்று பெங்களூர் மேற்கு என்று முத்திரையுடன் பெறப்பட்ட NOC கடிதத்தின் கவர் நகல், KA 03 MD 2255 வாகனத்தின் ஆர்.சி புத்தக நகல் 3 பக்கம், வட்டார போக்குவரத்து அலுவலர் தூத்துக்குடிக்கு மறு பதிவு செய்வதற்காக ஆணை வேண்டி வைக்கப்பட்ட **நோட் சீட் 4 பக்கம் அ.சா.ஆ.25 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.**

5. படிவம் 20, பாலமுருகன், கரிசல்குளம், கோவில்பட்டி அவர்களால் கொடுக்கப்பட்ட படிவம் 2 பக்கம், KA 02 A 1410 என்ற கனரக வாகனத்தின் தன்மை குறித்து வட்டார போக்குவரத்து அலுவலருக்கு மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களால் வைக்கப்பட்ட கடிதம், படிவம் 29 2 நகல்கள், கட்டணம் செலுத்திய விவரங்கள், படிவம் 30, படிவம் 28 இரண்டு நகல்கள், Chasis Pencil Print உடன், எஸ்.பி தூத்துக்குடியில் இருந்து ஆர்.டிஓ தூத்துக்குடிக்கு மேற்படி வாகனத்திற்கு வழக்குகள் எதுவும் நிலையில் இல்லை என்று பெறப்பட்ட கடிதம், வட்டார போக்குவரத்து அலுவலர், தூத்துக்குடி அவர்களால் பிறப்பிக்கப்பட்ட செயல் முறை ஆணை கடிதம் ஒன்று, பவடிம் 27, ஜோதி எண்டர்பிரைசஸ் கோவில்பட்டி டீசல் பில்ஒன்று, ஸ்ரீ வெங்கடாச்சலபதி கம்யூட்டர் எடை பார்க்கும் நிறுவனத்தின் எடை சீட்டு, மேற்படி வாகனம் உண்மை தன்மை வாய்ந்தது என்று பின்னாளில் இது சம்பந்தமாக ஏதேனும் வழக்கு இருப்பதாக தெரியவந்ததால் அது சம்பந்தமாக முழுபொறுப்பும் நானே ஏற்றுக் கொள்கிறேன் என்று பாலமுருகனால் வழங்கப்பட்ட ரூ.10/-க்கான உறுதி மொழிப்பத்திரம் ஒன்று, பாலமுருகன் குடும்ப அட்டை நகல், பாலமுருகன் கனரக வாககனத்தின் முன்பு நின்று கொண்டிருப்பது போல் உள்ள புகைப்படத்தின் நகல், பாலமுருகன் அவர்களால் மோட்டார் வாகன ஆய்வாளர் கோவில்பட்டி அவர்களுக்கு மேற்படி வாகனத்திற்கு முழு வரி, மறுபதிவு கட்டங்கள் செலுத்திவிடுகிறேன் என்று கொடுக்கப்பட்ட கடிதம், அதிகாரக்கடிதம் ஒன்று, படிவம் 60, புகைச்சான்று, மோட்டார் வாகனம் கோவில்பட்டி அவர்களால் வட்டார போக்குவரத்து அலுவலர் கிழக்கிற்கு NOC யின் உண்மை தன்மை கேட்டு அனுப்பட்ட கடித நகல், அதற்கு பதிலாக எஸ்.கிரிஸ்டப்பகௌடா,ஆர்.டி.ஓ, பெங்களுர் கிழக்கில் இருந்து மோட்டார் வாகன ஆய்வாளர் கோவில்பட்டிக்கு மேற்படி வாகனத்திற்கு வழங்கப்பட்ட NOC உண்மை தன்மை வாய்ந்தது என்றும் இவ்வலுவலகத்தினால் வழங்கப்பட்டது என்று போலியாக வழங்கப்பட்ட கடித நகல், மேற்படி வாகனத்தின் பதிவு சான்று நகல்கள் 6 பக்கம், மோட்டார் வாகன ஆய்வாளர் கோவில்பட்டி அவர்களால் வட்டார போக்குவரத்து அலுவலர் மறுபதிவு செய்ய கேட்டு **நோட்சீட் 4 பக்கம் அ.சா.ஆ.26 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.**
6. KA 02 AB 6860 மறுபதிவு செய்வதற்கு கொடுக்கப்பட்ட வாகனத்தின் படிவம் 20 இரண்டு பக்கம், மோட்டார் வாகன ஆய்வாளரால் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு அனுப்பட்ட மேற்படி வாகனத்தின் நிலை பற்றிய கடிதம், படிவம் 29 இரண்டு நகல்கள், பதிவு கட்டணம் செலுத்திய விவரங்களுக்கான நகல்கள், படிவம் 30, படிவம் 27, படிவம் இரண்டு நகல்கள், வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை, எஸ்.பி அலுவலகத்தில் இருந்து வட்டார போக்குவரத்து அலுவலருக்கு மேற்படி வாகனத்தின் மீது எந்த குற்றவழக்கும் இல்லை என்பதற்கான சான்றின் நகல், பாலமுருகன் அவர்களின் குடும்ப அட்டை நகல், Chasis pencil print, வாகனத்தின் புகைச்சான்று நகல்கள், ரூ.20/- பத்திரத்தில் அளிக்கப்பட்ட உறுதி மொழிப்பத்திரம், ஜோதி ஏஜென்சிஸ் கோவில்பட்டி அவர்களின் டீசல் பில் நகல்கள், வெங்கடாச்சலபதி கணினி எடை மேனை நிறுவனத்தின் எடைச்சீட்டு, பாலமுருகன் அவர்களால்

வழங்கப்பட்ட அதிகாரக்கடிதம், படிவம் 60 இரண்டு, மோட்டார் வாகன ஆய்வாளர் கோவில்பட்டியில் இருந்து வட்டார போக்குவரத்து அலுவலகம் கிழக்கு, மேற்படி வாகனத்தின் NOC யின் உண்மை தன்மை குறித்து அனுப்பட்ட கடிதம், எஸ்.கிரிஸ்டப்பா, வட்டார போக்குவரத்து அலுவலர், கிழக்கு பெங்களூர், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 கோவில்பட்டிக்கு மேற்படி NOC உண்மை தன்மை குறித்து அனுப்பட்ட போலி கடிதம் ஒன்றின் நகல், மேற்படி நகல் அனுப்பட்ட கடிதத்தின் கவர் நகல்கள், வாகனத்தின் ஆர்.சி புத்தகத்தின் நகல் 7 பக்கங்கள், வட்டார போக்குவத்து அலுவலர், தூத்துக்குடி அவர்களுக்கு மறு பதிவு செய்ய ஆணை வேண்டி மோட்டார் வாகன ஆய்வாளர், கோவில்பட்டி அவர்களால் அனுப்பட்ட நோட் சீட் 4 பக்கம் **அ.சா.ஆ.27 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.**

7. KA 02 A 9306 வாகனத்தை மறு பதிவு செய்ய பாலமுருகன் அவர்களால் கொடுக்கப்பட்ட படிவம் 20, தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்களுக்கு மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களால் சமர்பிக்கப்பட்ட சாப்டர் 7 கடிதம், படிவம் 29 இரண்டு எண்ணம், படிவம் 30 ஒன்று, படிவம் 27 ஒன்று, படிவம் 28 இரண்டு நகல்கள், வட்டார போக்குவரத்து அலுவலர், தூத்துக்குடி அவர்களின் செயல்முறை ஆணையின் நகல், பாலமுருகன் அவர்களின் குடும்ப அட்டை நகல், வெங்கடாச்சலபதி கணினி எடை மேடையின் எடைச் சீட்டு ஒன்று, வாகனத்தின் புகைச்சான்று, வாகனத்தின் உரிமையாளருடன் இருக்கும் வாகனத்தின் புகைப்படத்தின் நகல், எஸ்.பி அலுவலகத்தில் இருந்து தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலருக்கு மேற்படி வாகனத்தின் மீது எந்த வழக்குகளும் நிலுவையில் இல்லை என்று சான்று அளிக்கப்பட்ட கடிதம் ஒன்று நகல், பாலமுருகன் அளித்த அதிகாரக்கடித நகல், பாலமுருகனால் கொடுக்கப்பட்ட படிவம் 60 இரண்டு நகல்கள், மோட்டார் வாகன ஆய்வாளர், கோவில்பட்டி அவர்களால் வட்டார போக்கு வரத்து அலுவலர் பெங்களூர் கிழக்கு அவர்களுக்கு NOC யின் உண்மை தன்மை குறித்து (KA 02 A 9306) அறிய அனுப்பட்ட கடிதத்தின் நகல் ஒன்று, எஸ்.கிரிஸ்ட்டப்பா, வட்டார போக்குவரத்து அலுவலர், பெங்களூர் கிழக்கு அவர்களிடம் இருந்து மோட்டார் வாகன ஆய்வாளர் கோவில்பட்டி அவர்களுக்கு அனுப்பட்ட NoC குறித்த உண்மை தன்மை போலியாக அனுப்பட்ட கடிதத்தின் நகல் ஒன்று அத்துடன் கவரில் On IGS only என்று பெங்களூர் கிழக்கில் இருந்து அனுப்பட்ட கடிதத்தின் கவரின் நகல், மேற்படி வாகனம் ஆர்.சி நகல் 7 பக்கங்கள், வட்டார போக்குவரத்து அலுவலர், தூத்துக்குடி அவர்களுக்கு உரிமை மாற்றம் செய்ய ஆணை வழங்க வேண்டி அனுப்பட்ட மோட்டார் வாகன ஆய்வாளர் கோவில்பட்டி அவர்களின் கடித நகல் ஒன்று, பாலமுருகன் அவர்களால் வழங்கப்பட்ட ரூ.10/– உறுதி மொழிப்பத்திரம் ஒன்று, தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்களுக்கு உரிமை மாற்றம் மற்றும் மறு பதிவு செய்ய ஆணை வேண்டி பகுதி அலுவலகம் கோவில்பட்டியில் இருந்து அனுப்பட்ட ஆபீஸ் நோட் சீட் 4 பக்கம் நகல் **அ.சா.ஆ.28 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**மேற்படி குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் உண்மை நகல் என்று அ.சா.1 ஆல் சான்று அளிக்கப்பட்ட ஆவணங்கள் என்பதால் அவை எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை தொடர்ச்சிக்காக சாட்சியின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.